# TNPSC GROUP I / II - PRELIMINARY

# INDIAN POLITY - WORKSHEET

## அரசியலமைப்பின் முக்கிய அம்சங்கள்

- ♣ இந்திய அரசியலமைப்பு அதன் உள்ளடக்கத்தில் தனித்தன்மை வாய்ந்தது.
- ♣ இந்திய அரசியலமைப்பு உலகின் பல்வேறு அரசியலமைப்பிலிருந்து எடுக்கப்பட்டிருந்தாலும், அது தன்னை வேறுபடுத்தக்கொள்ள பல முக்கிய அம்சங்களைக் கொண்டுள்ளது .
- ♣ 1949ல் கொண்டுவரப்பட்ட அரசியல் அமைப்பு பல்வேறு மாறுதல்களை பல அரசியலமைப்பு திருத்தங்கள் மூலம் பெற்றது.
- ♣ இவற்றில் 7வது, 42வது, 44வது, 73வது, மற்றும் 74வது திருத்தங்கள் முக்கியமானவை.
- ♣ 42வது சட்டத்திருத்தத்தின்படி (1976) அதிக மாற்றங்கள் அரசியலமைப்பில் கொண்டு வரப்பட்டதால் இவை சிறு அரசியலமைப்பு என்று அழைக்கப்படுகிறது.
- ♣ எனினும், கேசவனந்த பாரதி வழக்கு (1973) முடிவின்படி உச்சநீதிமன்றம் பரிவு 368ன் கீழ் பாராளுமன்றத்தின் அதிகாரம் அரசியலமைப்பின் அடிப்படை அமைப்பை மாற்றக்கூடாது என்று அறிவித்துள்ளது.

- ▪ இறையாண்மை உடைய அரசியலமைப்பு (Soverign)
- ▪ குடியரசு அரசாங்கம்
- ▪ ஜனநாயக அரசாங்கம்
- ▪ சமயச் சார்பின்மை
- ▪ தனியாக சட்டமியற்றும் அமைப்பு, தனியான நிர்வாகம், சுதந்திரமான நீதித்துறை
- ▪ கூட்டாட்சி தத்துவம்
- ▪ தனிநபர் உரிமைகள்
- ▪ அரசுக்கு வழிகாட்டும் நெறிமுறைகள்
- ▪ நாட்டின் ஒற்றுமையும் ஒருமைப்பாடும்
- ▪ சட்ட விதி
- ▪ சுதந்திரமான தேர்தல்

## 1.நீளமாக எழுதப்பட்ட அரசியலமைப்பு (Lengthiest Written Constitution)

- அரசியலமைப்பு இரண்டு வகைப்படும். ஆவை: எழுதப்பட்ட அரசியலமைப்பு (அமெரிக்கா அரசியலமைப்பு), எழுதப்படாத ஒன்று (பிரிட்டிஷ் அரசியலமைப்பு).
- இந்திய அரசியலமைப்பு உலகிலேயே மிக நீளமாக எழுதப்பட்ட அரசியலமைப்பு ஆகும்.
- 1949ல் கொண்டு வரப்பட்ட அரசியலமைப்பில் முகவுரை (Preamble), 395 சரத்துகள் (Articles) (22 பகுதிகள் (Parts)) மற்றும் 8 அட்டவணைகள் (Schedules)இருந்தது.
- தற்போது (2014) அரசியலமைப்பு முகவுரை, 465 சரத்துகள் (25 பகுதிகள்) மற்றும் 12 அட்டவணையாக இருக்கிறது.
- 1951ல் இருந்து பல திருத்தங்கள் மூலமாக 20 சரத்துகளும், பகுதி (VII)ம் நீக்கப்பட்டது.
- 85 சரத்துகள், 4 பகுதிகள் (IVA, IXA, IXD மற்றும் XIVA) மற்றும் 4 அட்டவணைகள் (9, 10, 11 மற்றும் 12) சேர்க்கப்பட்டது.
- உலகில் எந்த ஒரு அரசியலமைப்பும் இவ்வளவு அதிக சரத்துகளையோ அட்டவணையோ கொண்டிருக்கவில்லை.

- இந்திய அரசியலமைப்பின் இப்பெரிய அளவிற்கான காரணிகள்:

  1. இந்திய இயற்கை அமைப்பு இன, மொழி வேற்றுமை தன்மை கொண்டது.
  2. வரலாற்று காரணி: மிகப் பெரிய இந்திய அரசியல் சட்டத்தின் (1935) தாக்கத்தில் இருந்து அரசியலமைப்பு உருவாகியது.
  3. மத்திய, மாநில பகுதிக்கு (ஜம்மு காஷ்மீர் மாநிலம் தவிர) ஒரே அரசியலமைப்பு இருந்தது.
  4. அரசியலமைப்பு சபையில் பெரும்பான்மையினர் சட்ட மேதையாக இருந்தனர். அரசியலமைப்பு அரசியல் அடிப்படை கொள்கையை மட்டும் கொண்டிருப்பதோடு மட்டுமல்லாமல் விரிவான நிர்வாக ஏற்பாடுகளையும் கொண்டிருக்கிறது.

- மூல அரசியலமைப்பில் 395 சட்டங்களும், 8 பட்டியல்களும் இருந்தன.
- பிற்காலத்தில் பல அரசியல் திருத்தங்களால் 468 சட்டங்கள் மற்றும் 12 பட்டியல்கள் உருவாகின.

1. 2019 ஆம் ஆண்டு வரை முந்தைய ஜம்மு மற்றும் காஷ்மீர் மாநிலம் தனக்கென சொந்த அரசியலமைப்பைக் கொண்டிருந்தது மற்றும் இந்திய அரசியலமைப்பின் விதி 370-ன் கீழ் சிறப்பு அந்தஸ்தை பெற்றிருந்தது.

2. 2019 ஆம் ஆண்டில் இந்த சிறப்பு அந்தஸ்து அரசியலமைப்பு ஆணை (ஜம்மு மற்றும் காஷ்மீர் பயன்பாட்டிற்கு) என்றழைக்கப்படும் குடியரசுத்தலைவர் ஆணை மூலம் ஒழிக்கப்பட்டது.

3. இந்த ஆணை "அரசியலமைப்பு (ஜம்மு மற்றும் காஷ்மீர் பயன்பாட்டிற்கு) ஆணை, 1954" என்ற முந்தைய ஆணையை மாற்றியமைத்தது. 2019 ஆம் ஆண்டின் ஆணை இந்திய அரசியலமைப்பின் அனைத்து கூறுகளையும் ஜம்மு மற்றும் காஷ்மீர் மாநிலத்திற்கும் விரிவுபடுத்தியது.

4. மேலும், ஜம்மு மற்றும் காஷ்மீர் மறுசீரமைப்புச் சட்டம், 2019 ஜம்மு மற்றும் காஷ்மீர் மாநிலத்தை ஜம்மு மற்றும் காஷ்மீர் யூனியன் பிரதேசம் மற்றும் லடாக் என்ற இரு தனி தனி யூனியன் பிரதேசங்களாகப் பிரித்தது.

## 2. பல்வேறு மூலங்களிலிருந்து வரையப் பட்டவை (Drawn from Various Sources)

- ♣ இந்திய அரசியலமைப்பில் இடம் பெற்றுள்ள விதிகள் அனைத்தும் உலகின் பல சிறந்த அரசியலமைப்பிலிருந்தும், 1935 இந்திய அரசு சட்டத்திலிருந்து எடுக்கப்பட்டது. இந்திய அரசியலமைப்பு 'உலகில் உள்ள அனைத்து அரசியலமைப்புகளையும் அலசி ஆராய்நதபின் உருவாக்கப்பட்டது' என டாக்டர் B.R. அம்பேத்கார் குறிப்பிட்டார்.
- ♣ அரசியலமைப்பின் அடிப்படை அமைப்பு முறை இந்திய அரசு சட்டம் 1935 லிருந்து எடுத்துக் கொள்ளப்பட்டது.
- ♣ அரசியலமைப்பின் தத்துவ பகுதி (அடிப்படை உரிமைகள் மற்றும் நெறிமுறைகள்) அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய அரசியலமைப்பில் இருந்து எடுக்கப்பட்டது.
- ♣ ஆரசியலமைப்பின் அரசியல் சார்ந்த பகுதி (அமைச்சரவைக் கொள்கை, நிர்வாகம் மற்றும் சட்டமன்றம் இடையேயான உறவுநிலை) இங்கிலாந்து அரசிடமிருந்தும் பெறப்பட்டது.

| வ. எண் | மூலங்கள் | எடுக்கப்பட்ட கொள்கைகள் |
|---|---|---|
| 1. | 1935 இந்திய அரசு சட்டம் | கூட்டாட்சி திட்டம், கவர்னர் அலுவலகம், நீதித்துறை, பொது பணித் தேர்வாணையம், அவசர கால சட்டங்கள் நிர்வாக செயல்கள் |
| 2. | பிரிட்டிஷ் அரசியலமைப்பு | பாராளுமன்ற அரசாங்கம், சட்டங்களின் விதிகள், சட்டமன்ற செயல் முறை, ஒற்றை குடியுரிமை, அமைச்சரவை அமைப்பு, தனி சிறப்பு உரிமை, பாராளுமன்ற சலுகைகள் மற்றும் இரு அவை. |
| 3. | ஐக்கிய அமெரிக்கா அரசியலமைப்பு | அடிப்படை உரிமைகள், நீதித்துறை சுதந்திர தன்மை, நீதித்துறை பரிசீலனை, உயர்நீதிமன்ற நீதிபதிகள் மற்றும் துணை ஜனாதிபதி பதவி. |
| 4. | அயர்லாந்து அரசியலமைப்பு | அரசு நெறிமுறைகள், இராஜ்ய சபைக்கு (மேலவை) உறுப்பினர்களை பரிந்துரை செய்தல், ஜனாதிபதி தேர்தல் முறை. |
| 5. | கனடா அரசியலமைப்பு | ஒரு வலுவான மையக் கூட்டமைப்பு, மையத்திற்கு (Central) மிஞ்சிய அதிகாரம் வழங்குவது. மத்திய அரசு மாநில கவர்கனர்களை நிர்ணயிப்பது. உச்ச நீதிமன்றத்தில் நீதி ஆலோசனை பெறுவது. |

| | | |
|---|---|---|
| 6. | ஆஸ்திரேலியா அரசிலமைப்பு | பொதுப் பட்டியல், வணிக சுதந்திரம், வர்த்தகம், பாராளுமன்ற இரு அவைகளின் கூட்டு அமர்வு. |
| 7. | ஜெர்மனியின் வெய்மர் அரசியலமைப்பு (Weimar Constitution of Germany) | அவசர சட்டத்தின் போது அடிப்படை உரிமைகளை ரத்து செய்தல், |
| 8. | சோவியத் யூனியன் அரசியலமைப்பு | அடிப்படை கடமைகள் மற்றும் முகவுரையில் சிறந்த நீதியை (சமூகம், பொருளாதாரம் மற்றும் அரசியல்) குறிப்பிடுவது. |
| 9. | பிரான்சு அரசியலமைப்பு | குடியரசு மற்றும் முகவுரையில் சுதந்திரம், சமத்துவம் மற்றும் சகோதரத்துவம் |
| 10. | தென் ஆப்பிரிக்கா அரசியலமைப்பு | அரசியலமைப்பு சட்டத்திருத்தங்களின் விதிமுறைகள், ராஜ்ய சபை (மேலவை) உறுப்பினர்களின் தேர்தல். |
| 11. | ஜப்பான் அரசியலமைப்பு | சட்டத்தினால் நிறுவப்பட்ட செயல்முறை |

### 3. நெகிழும் மற்றும் நெகிழா இயல்பு கொண்ட அரசியலமைப்பு (Blend of Rigidity and Flexibility)

- இங்கிலாந்து நாட்டின் அரசியலமைப்பு மிகவும் நெகிழும் தன்மை கொண்டது. அமெரிக்கா நாட்டின் அரசியலமைப்பு எளிதில் திருத்த இயலாத அளவிற்கு நெகிழா அமைப்பாக அமைந்துள்ளது.
- இந்திய அரசியலமைப்பு சில பகுதிகள் எளிய முறையில் திருத்தப்படலாம் என்றும், சில பகுதிகள் எளிதாகத் திருத்தம் செய்யப்பட இயலாது என்றும் அறியலாம்.
- ஆகவே, இந்த அரசியலமைப்பு நெகிழும் இயல்பும், நெகிழா இயல்பும் கொண்டுள்ளது.
- சரத்து 368 இரண்டு வகையான சட்டத்திருத்தத்தைக் கையாளுகிறது.
    1. சில விதிகளை நாடாளுமன்றத்தின் சிறப்பு பெரும்பான்மையுடன் திருத்தலாம். அதாவது, ஒவ்வொரு அவையிலும் மொத்த உறுப்பினர்களில், இருந்து வாக்களித்தவர்களில் 2/3 பெரும்பான்மை பெற்றிருக்க வேண்டும்.
    2. வேறு சில விதிகளை நாடாளுமன்றத்தின் சிறப்பு பெரும்பான்மை மற்றும் மொத்த மாநிலங்களில் பாதி மாநிலங்களின் சட்டமன்ற ஒப்புதலோடு திருத்தலாம்.

அதுபோன்று சில விதிகளை சாதாரண பெரும்பாண்மையுடன் திருத்தலாம். ஆனால் அத்திருத்தங்கள் சரத்து 368-ன் கீழ் வராது.

## 4. கூட்டாட்சி முறையும், ஒற்றையாட்சி முறையும் (Federal System with Unitary Bias)

- நமது இந்திய அரசியலமைப்பு கூட்டாட்சி முறையும் ஒற்றையாட்சி முறையும் ஒன்றாக கொண்டுள்ள ஓர் அரசியலமைப்பாக விளங்குகிறது.
- சாதாரண நேரங்களில் கூட்டாட்சி முறையை போன்ற அமைப்பை இந்தியாவில் காணலாம். எடுத்துக்காட்டு இரண்டு அரசுகள், எழுதப்பட்ட அரசியலமைப்பு, அதிகாரத்தில் பிரிவு அரசியலமைப்பின் ஆதிக்கம், சுதந்திர நீதித்துறை மற்றும் இரு அவை முறை.
- மத்திய அரசாங்கத்திற்கும் மாநில அரசாங்கத்திற்கும் அதிகாரங்கள் தனித்தனியே வரையறுக்கப்பட்டுள்ளன. நெருக்கடி காலச் சமயங்களில் மாநில அதிகாரங்களை மத்தய அரசே ஏற்றுக் கொள்ளும் வகையில் ஒற்றையாட்சிக் கூறுகள் உள்ளன.
- வலுவான மத்திய அரசு ஒரே குடியுரிமை, ஒரே அரசியலமைப்பு. அரசியலமைப்பின் நெகிழும் தன்மை ராஜ்ய சபையில் மாநிலங்களுக்குச் சமமற்ற பிரதிநிதித்துவம் போன்ற கூறுகள் ஒற்றையாட்சியை நினைவுப்படுத்தும்.
- மேலும் கூட்டாட்சி என்ற வார்தை அரசியலமைப்பில் எந்த இடத்திலும் வருவதில்லை, சரத்து 1ல் 'இந்தியா மாநிலங்களின் ஒன்றியம்' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.
- இந்திய கூட்டாட்சி மாநிலங்களின் ஒப்பந்தத்தினால் உருவான அமைப்பு இல்லை.
- மத்திய அரசிடமிருந்து இரண்டு மாநிலமோ அல்லது எந்த ஒரு மாநிலமோ பிரிந்து செல்ல உரிமை இல்லை.
- கே.சி.வியர் இந்திய அரசியலமைப்பை 'வடிவத்தில் கூட்டாட்சி ஆனால் உணர்வில் ஒற்றையாட்சி' மற்றும் 'அரைகுறை கூட்டாட்சி' என்று கூறினார்.
- பேரம் பேசப்பட்ட கூட்டாட்சி என்று மோரிஸ் ஜோன்சும், கூட்டுறவு கூட்டாட்சி என்று கிரென்வெல் ஆஸ்டினும், அதிகாரக் குவிப்பு கூட்டாட்சி என்று ஐவர் ஜென்னிங்சும் வர்ணித்துள்ளனர்.

## 5. பாராளுமன்ற மக்களாட்சி (Parlimentary Form of Government)

- இந்திய அரசியலமைப்பு ஒரு பாராளுமன்றம் சார்ந்த அரசாங்க முறையை வழங்குகிறது. அது பாராளுமன்றத்திற்குப் பொறுப்புடைய அரசாங்கம் என்றும் அழைக்கப்படுகிறது.
- பாராளுமன்ற அரசாங்க முறையில் செயலாட்சிக் குழு சட்டமன்றத்திற்கு பொறுப்புடையதாகும்.
- இந்திய செயலாட்சிக்குழு இரு பிரிவுகளை கொண்டது.
- ஒன்று பெயரளவிலானது, மற்றொன்று உண்மை தன்மை உடையது. செயலாட்சித் தலைவர் இந்திய குடியரசுத் தலைவராவர்.
- உண்மையான செயலாட்சிக்குழு என்பது பிரதம அமைச்சரையும் மற்றும் அவரது ஏனைய அமைச்சர்களையும் கொண்டதாகும்.
- நாடாளுமன்ற அரசாங்க முறையில் அமைச்சரவை உறுப்பினர்கள் தனிப் பொறுப்பும், கூட்டுப் பொறுப்பும் உடையவர்கள்.
- நாடாளுமன்ற அரசாங்க அமைப்புமுறையின் சிறப்புகள் பல:
    1. அமைச்சரவை குழு பொறுப்பாட்சி
    2. பெரும்பான்மைக் கட்சி ஆட்சி

3. கூட்டுப்பொறுப்பு
4. ஆமைச்சர்களாக இருக்கும் சட்டமன்ற உறுப்பினர்கள்
5. பிரதமரின் முன்னுரிமை
6. குடியரசுத் தலைவரின் தனி நிலை

**6.நாடாளுமன்ற இறையாண்மை ந௺தித்துறை மேலாண்மை ஒருங்கிணைப்பு**(Sythesis of Parliamentary Sovereignity and Judicial Supremacy)

- இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் நெகிழ்வு – நெகிழ்வற்ற தன்மைகளின் ஒருங்கிணைப்பைப் போன்றே நாடாளுமன்ற இறையாண்மை (Parliamentary Sovereignty) நீதித் துறை மேலாண்மை (Judicial Supremacy) ஒருங்கிணைப்பும் இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் தன்னிகரற்ற சிறப்பியல்பாகும்.

- இந்திய சட்டத்தின் 21 ஆவது சரத்து சட்டப்படி தீர்மானிக்கப்பட்ட விதிமுறை (Procedure established by law) யின்படி நாடாளுமன்ற இறையாண்மை நிலை நாட்டப்படுகிறது. அதே சமயம் அமெரிக்க அரசியல் அமைப்புச் சட்டத்தில் காணப்படும் இயல்பான சட்ட விதிமுறைப்படி (Due Process of Law) என்ற வாசகமும் தக்க மாற்றத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. இத்தகைய இரசவாத நாடாளுமன்ற இறையாண்மை – நீதித் துறை மேலாண்மை ஒருங்கிணைப்பும் இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தைத் தனித்துக் காட்டும் சிறப்புக் கூறாகும்.

**7. நீதித்துறையின் தனித்தன்மை**(Integrated and Independent Judiciary)

- சட்டப்படி சட்டமன்றத் துறை (Legislature), ஆட்சித் துறை (Executive), நீதித் துறை (Judiciary) ஆகிய மூன்றும் சம முக்கியத்துவமுடையவை. எனினும் நீதித் துறை சமமானவற்றுள் முதன்மை (First among equals) யாகக் கருதப்படுகிறது. இதற்குக் காரணங்கள் இரண்டு: 1. ஒருங்கிணைக்கப்பட்ட நீதித் துறை (Integrated Judiciary) – அதாவது உச்சநீதிமன்றம், உயர்நீதி மன்றங்கள், மாவட்ட நீதிமன்றங்கள், கீழ்நிலை நீதிமன்றங்கள் என்று படி முறையில் (Hierarchy) அமைத்து ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது. இவை மத்திய மாநில சட்டங்களை விசாரித்துத் தீர்ப்பளிக்கும். இது நீதிமன்ற ஒற்றை முறை (Single System of Courts) யாகும். அமெரிக்காவில் கூட்டாட்சி சட்டங்களை விசாரிக்கத் தனி நீதிமன்றங்களும். மாநில சட்டங்களைப் பற்றித் தீர்ப்பளிக்கத் தனி நீதிமன்றங்களும் உள்ளன.

- சுதந்திர நீதித்துறை (Independent Judiciary) - இந்தியாவில் உச்சநீதிமன்றம் (Supreme Court) தான் நீதித் துறையின் சிகரமாகும். இதற்கு மேல் மேல்முறையீட்டுக்கு வழியில்லை. உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பே இறுதித் தீப்பாகும். மத்திய மாநிலச் சட்டங்கள் இம்மன்றத்தின் தீர்ப்புக்குக் கட்டுப்பட்டவை. இம்மன்றம் அரசியல் அமைப்புச் சட்டக் காவலன் மட்டுமல்லாது குடிமக்களின் அடிப்படை உரிமைகளின் பாதுகாவலனாகவும் உள்ளது. நீதித் துறையின் சுதந்திரத்தைப் பாதுகாப்பதற்காக இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தில் பல சரத்துக்கள் உள்ளன. இச்சரத்துக்கள் நீதிபதிகளின் பணிப் பாதுகாப்பு, நிலையான பணி நிபந்தனைகள், ஊதிய உத்திரவாதம், நீதிபதிகள் பற்றி விவாதிக்கக் கூடாது என்ற சட்டமன்றக்

கட்டுப்பாடு, பணி ஓய்வுக்குப் பின் நீதிபதிகள் பணியைத் தொடரக் கூடாது என்ற நிபந்தனை, நீதிமன்ற நிந்தனையைத் தண்டிக்கும் அதிகாரம், சட்டத்துறையை நீதித் துறையிடமிருந்து பிரித்திருப்பது, அரசியல் அமைப்புச் சட்டத்துக்கு விளக்கமளிக்கும் அதிகாரம், சட்ட மறு ஆய்வு அதிகாரம் போன்றவை நீதித் துறைக்கு அளிக்கப்பட்டுள்ளது. எனவே ஒருங்கிணைக்கப்பட்ட நீதித் துறையும், நீதித் துறை சுதந்திரமும் நீதித் துறையின் இரட்டைச் சிறப்பியல்புகளாகும்.

## 8. அடிப்படை உரிமைகள் (Fundamental Rights)

- இந்திய அரசியலமைப்பின் பகுதி IIIல் அடிப்படை உரிமைகள் இடம்பெற்றுள்ளன (சரத்துகள் 12முதல் 35வரை), இவை தனி மனித வளர்ச்சிக்கு தகுந்த சூழ்நிலைகளை வகுத்து கொடுப்பதோடு, உண்மையான மக்களாட்சியை அனுபவிப்பதற்கும் உதவி புரிகின்றன.
- இந்திய அரசியலமைப்பு பகுதி IIIல் அனைத்து குடிமக்களுக்கான ஆறு அடிப்படை உரிமைகளை குறிப்பிடுகிறது.
- அடிப்படை உரிமை அரசியலமைப்பில் மக்களாட்சி நலனுக்காக அமைக்கப்பட்டுள்ளது.
- அடிப்படை உரிமைகள் வழங்கப்படுவது மறுக்கப்பட்டால் நீதிமன்றத்தில் குடிமக்களை அணுகலாம்.

## 9. அரசுக் கொள்கையின் நெறிமுறை கோட்பாடுகள் (Directive Principles of State Policy)

- டாக்டர்.B.R.அம்பேத்கார், அரசு கொள்கையின் நெறிமுறை கோட்பாடுகள் இந்திய அரசியலமைப்பின் முக்கிய அம்சம் என கூறினார்.
- இந்திய அரசியலமைப்பின் பகுதி IVல் அரசுக் கொள்கையின் நெறிமுறை கோட்பாடுகள் இடம் பெற்றிருக்கின்றன. (சரத்துகள் 38 முதல் 51 வரை). நாட்டை ஆட்சி செய்வதற்கு இவை அடித்தளமாக இருக்கின்றன.
- அரசுக் கொள்கையினை நெறிப்படுத்தும் கோட்பாடுகள் அரசுக்கு வழிகாட்டியாக இருப்பதோடு போதும், அடிப்படையாக ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.
- நமது நாட்டில் பொது நல அரசு அமைப்பதற்கும் இவைகளே வழி காட்டியாக வருகின்றன.
- மினர்வா ஆலை வழக்கில் (Minerva Mills Case) (1980) உச்சநீதிமன்றம் ‘இந்திய அரசியலமைப்பில் அடிப்படை உரிமைகள் மற்றும் அரசு நெறிமுறை கோட்பாடுகள் சமநிலை தன்மையை அடிப்படையாக கொண்டு அமைந்துள்ளது’ என கூறியது.

## 10. அடிப்படை கடமைகள்

- மூல அரசியலமைப்பில் குடிமக்களுக்கான அடிப்படை கடமைகள் கொடுக்கப்படவில்லை.

- ♣ இவை (1975-1977) உள்நாட்டு அவசர சட்டத்தின் போது ஸ்வரன்சிங் குழுவின் பரிந்துரைப்படி 1976ல் 42 வது அரசியலமைப்பு சட்டத்திருத்தத்தின் படி அடிப்படை கடமைகள் பகுதி IVA, சரத்து 51Aல் 10 கடமையாக அறிமுகப்படுத்தப்பட்டது.
- ♣ பின்பு 2002ல் 86வது அரசியலமைப்பு சட்டத் திருத்தத்தின்படி கூடுதலான ஒரு அடிப்படை கடமை சேர்க்கப்பட்டுள்ளது. தற்போது 11 அடிப்படை கடமைகள் அரசியலமைப்பில் உள்ளன.
- ♣ அரசியல் நெறிமுறை போன்று அடிப்படை கடமைக்காக வழக்கு தொடர முடியாது.

## 11. மதசார்பற்ற அரசு (Secular State)

- ♣ நமது அரசியலமைப்பு மதச் சார்பற்ற அரசை நிறுவியுள்ளது. நமது அரசு மதத் தலையீட்டில் இருந்து விடுபட்டு எந்த குறிப்பிட்ட மதத்தையும் சாராது அமைந்துள்ளது.
- ♣ குடிமக்கள் அனைவருக்கும் சுதந்திரமான தெய்வ நம்பிக்கை, வழிபாட்டுச் சுதந்திரம் அளிக்கப்படுகிறது. இவ்வகையில் இந்தியா ஒரு மதச் சார்பற்ற அரசாக விளங்குகிறது.
- ♣ 1976, 42வது அரசியலமைப்பு சட்டத்திருத்தத்தின் படி இந்திய அரசியலமைப்பு முகவுரையில் 'மதசார்பற்ற' என்ற வார்த்தை சேர்க்கப்பட்டது.
- ♣ சரத்து 14ன் படி சட்டத்திற்கு முன்பு அனைத்து நபர்களும் சமம் அல்லது சட்டம் சமமாக பாதுகாக்கப்படுவது மறுக்கப்படவில்லை.
- ♣ சரத்து 16ன் படி அனைத்து குடிமகன்களுக்கும் பொது வேலைவாய்ப்புகளில் சம அளவு வாய்ப்புகள் வழங்கப்படும்.
- ♣ சரத்து 25ன்படி அனைத்து நபர்களும் சுதந்திர மத உணர்வுகளை வெளிப்படுத்தவும், பிரச்சாரம் செய்யவும் சம உரிமை உள்ளது.
- ♣ சரத்து 27ன்படி எந்த ஒரு நபரும் மத வளர்ச்சிக்காக எந்த ஒரு வரியும் கட்ட கட்டாயப்படுத்தப்பட கூடாது.
- ♣ சரத்து 28ன்படி அரசால் நிர்வகிக்கப்படும் கல்வி நிறுவனங்களில் எந்த ஒரு மத போதனையையும் கடைபிடிக்க கூடாது.
- ♣ சரத்து 29ன் படி அனைத்து குடியுரிமை பிரிவினரும் தங்களது தனித்துவமிக்க மொழி, கல்வெட்டு மற்றும் பண்பட்டை பாதுகாக்கலாம்.
- ♣ சரத்து 30ன்படி அனைத்து சிறுபான்மையினரும் தங்கள் விருப்பப்படி கல்வி நிறுவனங்களை நிறுவி நிர்வாகம் செய்யலாம்.
- ♣ சரத்து 44ன் படி அரசு சீரான குடிமை குறியீட்டின் மூலம் அனைத்து குடிமக்களையும் பாதுகாக்க முயற்சி செய்ய வேண்டும்.

## 12. வயது வந்தோர் வாக்குரிமை (Universal Adult Franchise)

- ♣ இந்திய அரசியலமைப்பு வயது வந்தோர் அனைவருக்கும் வாக்குரிமை வழங்க உறுதியளிக்கிறது.
- ♣ பதினெட்டு வயது நிரம்பிய ஒவ்வொரு குடிமகனும் சாதி, மதம், நிறம், பாலினப் பாகுபாடு இன்றி தேர்தலில் பங்கு பெற உரிமை பெற்றுள்ளார்.
- ♣ இப்படி பல்வேறு சிறப்பு கூறுகளை உள்ளடக்கியது இந்திய அரசியலமைப்பு,

- 1988, 61 வது அரசியலமைப்பு சட்டத் திருத்தத்தின்படி 1989ல் வாக்குரிமை வயது 21லிருந்து 18 ஆக குறைக்கப்பட்டது.

APOLLO STUDY CENTRE

## 13. ஒற்றை குடியுரிமை (Single Citizenship)

- ♣ இந்திய அரசியலமைப்பு கூட்டாட்சி இரு அரசு (மத்திய மற்றும் மாநில) இருந்தும், ஜம்மு காஸ்மீர் தவிர இந்தியா முழுவதும் ஒரே குடியுரிமை மட்டுமே வழங்கப்படுகிறது.

> ▪ ஐக்கிய அமெரிக்க நாட்டில் அமெரிக்க குடியுரிமை மற்றும் மாகாண குடியுரிமை என்று இரு குடியுரிமை வழங்கப்படுகின்றன.

## 14. தன்னாட்சி அமைப்புகள்: (Independent Bodies)

- ♣ இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் மற்றொரு சிறப்பு அம்சம் தன்னாட்சி அமைப்புகளைப் பற்றிய சரத்துக்களாகும். வழக்கமாக அரசியல் அமைப்புச் சட்டத்தில் அரசாங்கத்தின் முப்பெரும் பகுதிகளான சட்டமன்றத்துறை, ஆட்சித் துறை, சட்டத்துறை பற்றிய சரத்துக்களே இடம் பெற்றிருக்கும். எனினும் இந்திய சட்டத்தில் தன்னாட்சி அமைப்புகளுக்குச் சிறப்பிடம் அளிக்கப்பட்டுள்ளது.

  1. தேர்தல் ஆணையம் (Election Commission)
  2. இந்திய கணக்காயர் மற்றும் தணிக்கைத் துறைத் தலைவர் (Comptroller and Auditor – General of India)
  3. மத்திய பொதுப்பணித் தேர்வாணையம் (Union Public Service Commission)
  4. மாநில பொதுப்பணித் தேர்வாணையம் (State Public Service Commission)

- ♣ இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் பகுதிகளாகக் கருதப்படும் இந்த அமைப்புகள் முழு சட்டச் சுதந்திரம் பெற்றவை. சட்ட மன்றம், ஆட்சித் துறை, நீதித் துறை போன்று தனித்தியங்க வல்லவை. இந்த அமைப்புகளின் சதந்திரம் பாதுகாக்கப்படுவதற்காக இந்த அமைப்பு சார்ந்தவர்களுக்கு பணிக்கால, பணி நிபந்தனை, ஊதியம் பற்றிய சட்டப் பாதுகாப்பு கொடுக்கப்பட்டுள்ளன.

## 15. நெருக்கடிக் கால நியதிகள் (Emergency Provisions):

- ♣ இந்திய அரசியல் அமைப்புச் சட்ட கர்த்தாக்கள் முன்யோசனையுடனும், தொலை நோக்குடனும் மேற்கொண்ட முடிவே நெருக்கடிக் கால நியதிகளாகும் (Emergency Provisions). அவர்கள் மூன்று வகை நெருக்கடிகளை மனதில் கொண்டு இந்த நியதிகளை வகுத்துச் சட்டத்தில் சேர்ந்தனர்.

  1. பொது நெருக்கடி (General Emergency)
  2. அரசியல் அமைப்பு நெருக்கடி (Constitutional Emergency)

3. நிதி நெருக்கடி (Financial Emergency)

இம்மூவகை நெருக்கடிகளை எதிர் கொள்வதற்காக சட்டச் சரத்துகள் (352, 356, 360) இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தில் இடம் பெற்றுள்ளன. இந்நெருக்கடிக் கால நியதிகள் இந்திய அரசியல் அமைப்புச் சட்த்தின் தனித்தன்மையோடு கூடிய சிறப்பியல்புகளில் ஒன்றாகும்.

## 16. மூன்று அடுக்கு அரசு (Three-Tier Government)

- முதலில் அமைக்கப்பட்ட இந்திய அரசியலமைப்பில் கூட்டாட்சி முறைப்படி மத்திய அரசு மற்றும் மாநில அரசுக்கு நிர்வாக அதிகாரம் கொடுக்கப்பட்டது.
- பின்பு 73வது மற்றும் 74வது அரசியலமைப்பின் சட்டத்திருத்தத்தின்படி (1992) மூன்று அடுக்கு அரசு அறிமுகப்படுத்தப்பட்டது. இவை உலகின் எந்த அரசியலமைப்பிலும் காணப்படவில்லை.
- 1992, 73வது சட்டத்திருத்தத்தின் படி பஞ்சாயத்துக்கான (கிராம உள்ளூர் அரசாங்கம்) அதிகாரத்தை வழங்கி அட்டவணை 11ல் (பகுதிIX) இவற்றிற்கு அரசியலமைப்பு அந்தஸ்து கொடுக்கப்பட்டது.
- அதேபோல் 74 வது சட்டத்திருத்தத்தின் படி (1992) அட்டவணை 12ல் (பகுதிIXA) நகராட்சிக்கான அதிகாரத்தை வழங்கி இவற்றிற்கும் அரசியலமைப்பு அந்தஸ்து கொடுக்கப்பட்டது.

**அரசியலமைப்பின் பகுதிகள் மற்றும் சரத்துகள்**

| பகுதிகள் | பாடப்பொருள் | சரத்துகள் |
|---|---|---|
| I. | ஒன்றியம் மற்றும் மாகாணம் (The Union and its Territory) | 1-4 |
| II. | குடியுரிமை (Citizenship) | 5-11 |
| III. | அடிப்படை உரிமை (Fundamental Rights) | 12-35 |
| IV. | அரசு கொள்கையின் நெறிமுறைகள் (Directive Principles of State Policy) | 36-51 |
| IVA. | ஆடிப்படை கடமைகள் (Fundamental Duties) | 51A |
| V. | மத்திய அரசு (The Union Government ) | 52-151 |
| | அத்தியாயம்1-செயல் அதிகாரிகள் (The Executive) | 52-78 |
| | அத்தியாயம்2 –பாராளுமன்றம் (Parliment) | 79-122 |
| | அத்தியாயம்3-ஜனாதிபதியின் சட்டவாக்க அதிகாரங்கள் (Legislative Powers of President) | 123 |

| | | |
|---|---|---|
| | அத்தியாயம்4 –மத்தி நீதித்துறை (The Union Judiciary) | 124-147 |
| | அத்தியாயம்5 -இந்திய கணக்கு மற்றும் தணிக்கையாளர் (Comptroller and Auditor-General of India) | 148-151 |
| VI. | மாநில அரசு (The State Governments) | 152-237 |
| | அத்தியாயம்1 –பொதுவானவை (General) | 152 |
| | அத்தியாயம்2 –செயல் அதிகாரங்கள் (The Executive) | 153-167 |
| | அத்தியாயம்3 –மாநில சட்டமன்றம் (The State Legislature) | 168-212 |
| | அத்தியாயம் 4 –ஆளநரின் சட்ட உருவாக்க அதிகாரம் (Legislative Powers of Governor) | 213 |
| | அத்தியாயம்5 –உயர்நீதிமன்றம் (The High Courts) | 214-232 |
| | அத்தியாயம்6 –துணை கீழ்நீதிமன்றம் (Subordinate Courts) | 233-237 |
| VII. | ஒன்றிய மாகாணங்கள் (The Union Territories) | 239-242 |
| IX. | பஞ்சாயத்துகள் (The Panchayats) | 243-243(O) |
| IXA. | நுகராட்சிகள் (The Municipalities) | 243P-243ZG |
| IXB. | கூட்டுறவு சங்கங்கள் (The Co-operative Societies) | 243P-243ZT |
| X. | தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியின பகுதிகள் (The Scheduled and Tribal Areas) | 244-244A |
| XI. | மத்திய மற்றும் மாநில அரசுக்கு இடையேயுள்ள உறவுகள் (Relations between the Union and the States ) | 245-263 |
| | அத்தியாயம்1 –சட்டமன்ற உறவுகள் (Legislative Relations) | 245-255 |
| | அத்தியாயம்2 –நிர்வாக உறவுகள் (Administrative Relations) | 256-263 |
| XII. | நிதி, சொத்து, ஒப்பந்தங்கள், வழக்குகள் (Finance, Property, Contracts and the States) | 264-300A |
| | அத்தியாயம்1 –நிதி (Finance) | 264-291 |
| | அத்தியாயம்2 –கடன் (Borrowing) | 292-293 |

| | | |
|---|---|---|
| | அத்தியாயம்3 –சொத்து, ஒப்பந்தங்கள், உரிமைகள், வழக்குகள், பொறுப்புகள் மற்றும் கடமைகள் (Property, Contracts, Rights Liabilities, Obligations and Suits) | 294-300 |
| | அத்தியாயம்4 –சொத்துரிமை (Rights to Property) | 300A |
| XIII. | வர்த்தகம், வணிகம் மற்றும் இந்திய எல்லைகளுக்குள்ளேயுள்ள உறவு (Trade, Commerce and Intercource within the Territory of India) | 301-307 |
| XIV. | ஒன்றியம் மற்றும் மாநிலங்களும் கீழ் உள்ள பணிகள் (Services under the Union and the States) | 308-323 |
| | அத்தியாயம்1 –பணிகள்/சேவைகள் (Services) | 308-314 |
| | அத்தியாயம்2 –அரசு தேர்வாணையம் (Public Service Commission) | 315-323 |
| XIVA. | நீதிமன்றங்கள் (Tribunals) | 323A-323B |
| XV. | தேர்தல்கள் (Elections) | 324-329A |
| XVI. | சில பிரிவுக்கு தொடர்பான சிறப்பு சலுகைகள் (Special Provisions relating to Certain Classes) | 330-342 |
| XVI-I. | அலுவலக மொழி (Official Language) | 343-351 |
| | அத்தியாயம்1 -ஒன்றிய மொழிகள் (Language of the Union) | 343-344 |
| | அத்தியாயம்2 -மண்டல மொழிகள் (Ragional Languages) | 345-347 |
| | அத்தியாயம்3 -உச்சநீதிமன்ற, உயர்நீதிமன்ற மொழிகள் (Language of the Supreme Court, High Courts, and so on) | 348-349 |
| | அத்தியாயம்4 -சிறப்பு கட்டளைகள் (Special Directives) | 350-351 |
| XVIII. | அவசரகால ஏற்பாடுகள் (Emergency Provisions) | 352-351 |
| XIX. | இதர அமைப்புகள் (Miscellaneous) | 361-367 |
| XX. | அரசியலமைப்பு திருத்தங்கள் (Amendment of Constitution) | 368 |
| XXI. | தற்காலிக, இடைநிலை மற்றும் சிறப்பு சலுகைகள் | 369-392 |

| | | |
|---|---|---|
| | (Temporary, Transitional and Special Provisions ) | |
| XXII. | ஹிந்தி உரையில் அதிகாரப் பூர்வமாக உள்ள குறகிய தலைப்புகள் நீக்கப்படுல் (Short title, Commencement, Authoritative Text in Hindi and Repeals) | 393-395 |


APPOLLO STUDY CENTRE